ம.கலையரசியின்

# கலாபம்

கவிதை தொகுப்பு

# கலாபம்

(கவிதை தொகுப்பு)

-ம.கலையரசி-

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | கலாபம் |
| நூலின் வகை | : | கவிதை தொகுப்பு |
| நூலாசிரியர் | : | ம.கலையரசி |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| மொழி | : | தமிழ் |
| 1ம் பதிப்பு | : | 2015 |
| பக்கங்கள் | : | 112 |
| அச்சுப்பதிப்பு | : | காயத்ரி அச்சகம்,<br>அட்டன் |
| விலை | : | ரூ.200.00 |
| Title | : | Kalabham |
| Author | : | M.Kalaiyarasi |
| Language | : | Tamil |
| First Edition | : | 2015 |
| No Of Pages | : | 112 |
| Printed by | : | Gayathri Printers,<br>Hatton. |
| Price | : | Rs.200.00 |

# என் பெற்றோருக்கு அர்ப்பணம்....

அடக்கம் புகட்டி , அழகு
புயணம் நீ காட்டி
அவனி போற்ற செய்த
அன்னையே....

மந்திரம் புகட்டி , வாழ்க்கை
தந்திரம் நீ காட்டி
பார் புகழ செய்த
தந்தையே....

உமக்காக
கவி பாடும் என்
புலனனைத்தும்....
சிரம் சாய்க்கும் என்
செயலனைத்தும்.....

ஜீவன் தந்த உமக்கு – என்
ஜென்மம் முழுவதும் சமர்ப்பணம்....
பால் வார்த்த உமக்கு – என்
நூல் வாழ்த்து அர்ப்பணம்.....

-உங்களால் ஜனனித்தவள்-

## கலாபத்தினுள்.......

1. முன்னுரை
2. அணிந்துரை
3. வாழ்த்துரை
4. அன்புத்தாயே
5. குழந்தையாகிறேன்
6. மரணித்த மனிதம்
7. கொழுந்துப்பெண்
8. காதல் வழக்கு
9. உன் முகம் காண
10. மன்னிக்கலாமா?
11. அறிந்தவனானேன்
12. இன்னுமொருமுறை
13. க(இ)ஷ்டம்
14. கலையாத சோகம்
15. சாத்தான்
16. தனிமை
17. கள்ளி
18. கணவனின் கல்லறையில்
19. மலடியின் தாலாட்டு
20. விதியின் சதியில்
21. ஆட்டுக்காரி
22. சுரம் தந்த வரம்
23. பெண்ணே
24. நீயெனக்கு

25. பூப்பூக்கும் ஓசை
26. மத்தாப்பூ
27. களவொழுக்கம்
28. மாற்றம்தான்
29. தொடரும் பயணம்
30. இறந்துப்போனவள்
31. வெட்டி வைத்த புதைக்குழி
32. ஆயா மரம்
33. சிருஷ்டி
34. கலிக்காதல்
35. மலை தே(ந)சம்
36. நீ என் காதலியானால்
37. எனக்கும் தருவீர்களா?
38. காதலித்துப்பார்
39. கலாபம்
40. ஒரு முறையாவது பாருங்களேன்
41. அகதிகளானோம்
42. போற்றிப்பாடடி கண்ணே
43. திறனற்றவன்
44. அம்மாவின் கணவன்

# முன்னுரை

இளைய இதயங்களுக்கு.......

என் இனிய தமிழ் வணக்கம்........

தமிழ் பரப்பில் எனது முதல் பிரசவம் கலாபம் கவிப்பூக்கள் பூத்த பக்கங்களாக கையில் தவழ்கிறது கவிநயம் காட்டி விழியில் விளையாடுகிறது. வாசிக்கும் நொடிகளில் வாசகர் நெஞ்சம் நெகிழ வேண்டுமென்பதே என் அவா....

குறுகிய கால வாழ்க்கைப்பயணத்தில் சாதனையின் நிழலையாவது எட்டிப்பிடிக்க நினைத்தேன் முடிந்த வரை முயற்சித்தேன் முடியாத நேரங்களில் பயிற்சியும் பெற்றேன், அனுபவ பாடங்களையும் சிரமேற்றேன்.

என்னால் சொல்ல முடிந்ததையும், சொல்ல முடியாததையும் கற்பனையில் புகுத்தி,சொற்களால் கோர்த்து, எழுத்துக்களாக பொறித்து கவியெனும் சாளரத்தில் சங்கமிக்கும் வழி சமைத்திருக்கிறேன், மலையக மங்கையென மார்தட்டிக்கொள்கிறேன்.

நினைத்து பார்க்க முடியாத நிம்மதியை கவிதை வடிக்கும் போது நான் அனுபவிக்கிறேன். எத்தனையோ திறமைகள் என்னுள் புதைந்து கிடந்தது அதை தூசி தட்டி பட்டை தீட்டி புடமிட்டது எனது பாடசாலை...

முதன் முதலாக எனக்கும் கவிதை எழுத முடிகிறது என்பதை நான் தெரிந்துக்கொண்டது எனது பதினாறாவது வயதில்தான், அதனை கண்டுபிடித்த பெருமை எனது பாடசாலையையே சாரும்.

எனது கன்னி முயற்சியிலான கலாபத்தின் உருவாக்கத்திற்கு பின்னால் எத்தனையோ நல்லுள்ளங்களின் உழைப்பு கைக்கோர்த்திருக்கிறது.

ஆனந்தக்கண்ணீரிலும், துக்கக்கண்ணீரிலும், வெறுப்புக் கண்ணீரிலும், சலிப்புக்கண்ணீரிலும், பக்குவக்கண்ணீரிலும்

கலாபப்பக்கங்கள் ஈரப்பதத்துடன் இருப்பதால் எச்சில் தொட்டு எந்தப்பக்கத்தையும் புரட்டிவிடாதீர்கள்....

என் அறிவுக்கு எட்டியதையும் மனதிற்கு பட்டதையுமே உங்கள் விழிப்பரப்பிற்கு உற்சவப்படுத்தியிருக்கிறேன்.

நிறைகளிருப்பின் சிந்தியுங்கள்,குறைகளிருப்பின் நிந்தியுங்கள் பிறகு மன்னியுங்கள்.

-ம.கலையரசி –

செனன்,ஹட்டன்

mahendrankalaiyarasi@gmail.com

http://eluthu.com/nanbarkal/kalai3.html

## வாழ்த்துரை.........

இலக்கிய படைப்புகள் ஒரு சமூகத்தின் மறுமலர்ச்சியை கோடிட்டு காட்டுவதாகும். அந்த வகையில் ஹட்டன் நகரில் செனன் பிரதேசத்தை வதிவிடமாகவும் செனன் த.ம.வித்தியாலய பழைய மாணவியுமான ம.கலையரசியின் கவிதை தொகுப்பு வெளியீடு ஒரு நல்ல முயற்சியாகும்.

மாணவப்பருவத்திலேயே மிகவும் எழுத்தாற்றல் மிக்கவராக விளங்கியவர். பல்வேறு போட்டிகளில் பங்குபற்றி பரிசும் பெற்றவர். இவரது கரங்களில் மலர்ந்துள்ள இக்கவிதைத்தொகுப்பு காத்திரமான கருவை சுமந்து வந்து சமூகத்தின் ஒவ்வொரு வாசகரின் உள்ளத்திலும் ஊடுருவிச்சென்று எமது சமூகத்தில் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்த வேண்டுமென எதிர்ப்பார்த்து, இவரது இப்பணி தொடர எனது நல்வாழ்த்துக்கள்.

திரு.S.பரமநாதன்
முன்னாள் அதிபர்
செனன் த.ம.வி

## அணிந்துரை..........

"பேச்சு பல்லக்கில் தம்பி கால்நடையில்" என்ற ஒரு முதுமொழி உண்டு. பேசிக்கொண்டே எதையும் சாதிக்காது முதுமையடைந்துவிட்ட முதுமைகளுக்கு இது நல்ல முதுமொழி.

செல்வி ம்..கலையரசி செனன் தமிழ் வித்தியாலயத்தின் பெருமைக்குரிய பழைய மாணவி. தான் கல்வி கற்ற காலத்தில் மாணவ பக்குவத்தோடு பொருத்தமாக தலைமைத்துவ ஆளுமைகளை வளர்த்துக்கொண்டவர்.

பேச்சைக்குறைத்து தனக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளுக்கு செயல் வடிவம் கொடுத்து பாடசாலை காலத்திலே சமூக நட்சத்திரமாக ஜொலித்தவர்.

கல்வியில் அக்கறை காட்டியது போலவே இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் ஆர்வம் காட்டி, அர்ப்பணிப்போடு செயலாற்றி கவிதைப்போட்டியில், தேசிய மட்டம் வரை தன் பெயரை பொறித்துக்கொண்டு இன்று சீருடை மடிப்பு களையுமுன்பே " கலாபம்" என்ற கவிதை தொகுப்பை வெளியிடும் அளவிற்கு தன்னை உயர்த்திக்கொண்டிருப்பதானது, தனது திறமையை சான்றுபடுத்தி நிற்கின்றது.

"தாயொடு அறுசுவைபோம்" என்றாள் ஔவை. இவரது முதற்கவிதையே தாயின் பெருமையை கூறும் கவிதையாய் அமைந்துள்ளதோடு, பல சமூக அநீதிகளையும் பிஞ்சு மனம் கடிந்து கொள்வது கண்டு இவரது எதிர்கால படைப்புக்கள் பாரதி கண்ட புதுமைப்பெண்ணாக இவரை பார்க்க முடியும் என்று நம்ப இடமுண்டு. காரணம் " விளையும் பயிரை முளையிலேயே தெரியும்..!".

இலத்திரனியல் ஊடகங்கள் எங்கும் இழையோடியுள்ள இத்தருணத்தில் அச்சு ஊடகத்திற்கு வாசகர்கள் அருகி வருகின்றனரா? என்றவொரு சந்தேகம் எழும்பி வரும் இத்தருணத்தில் பொருளாதார ரீதியில் இலாப நோக்கத்தை முன்னுரிமை படுத்தாது இந்த கவிதை தொகுப்பை வெளியிடுவது " முயற்சி திருவினையாக்கும்" என்பதை எடுத்தியம்புகிறது.

செல்வி ம.கலையரசிக்கு எனது பாராட்டுக்கள்.

திரு. T.சண்முகநாதன்
அதிபர்
செனன் த.ம.வி

## வாழ்த்துரை.........

“சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச்செய்வீர்”

அகம் எனும் கருவறையில் பல மாற்றத்தை வேண்டி நிற்கும் சமுகத்தை மாற்றத்தை தரும் தன்னம்பிக்கையோடு எழுந்து நிற்கும் இளம் படைப்பாளிதனை வலுவாக்கி முனைப்புறச்செய்து எம் சமுகத்தின் அழகிய முகத்தை பற்றி மேலும் தெளிவாக்க ‘ கலாபம்’ பல காலங்களாக உயிர் கொடுக்கப்பட்டு உருவாகி முழுமையடைந்து நாளை குழந்தை போல பலரது கரங்களிலும் தவழப்போகும் உயர்ந்த உங்கள் ஆக்கம் மலையகத்தில் பிறந்துள்ள இன்னுமொரு முத்து.இது போன்ற பல முத்துக்களை உருவாக்கி தரணி எங்கும் புகழ் பரப்ப என் ஆசிகளோடு ஆண்டவனின் அருளும் உங்களுக்கு உரித்தாக வாழ்த்துகிறேன்.

அதிபர்

திரு.S.N.குரூஸ்

புனித ஜோன் பொஸ்கோ கல்லூரி

ஹட்டன்

# எதிர்பார்ப்புகளுடன் ஒரு வாழ்த்துரை

கலாபம் என்ற கவிதை தொகுப்பின் ஆசிரியர் ம.கலையரசியை அவ்வப்போது இலக்கிய கூட்டங்களிலும், கலந்துரையாடல்களிலும் சந்தித்ததாக நினைவு. ஆனால் அவரது கவிதைத் தொகுப்பை வாசித்தபோது தான் அவருள் மறைந்திருக்கின்ற சமூகவுணர்வையும் அத்தனடியாக எழுகின்ற கவித்துவத்தையும் தரிசிக்க முடிந்தது.

வாழ்வில் உரிமைகள் மறுக்கப்பட்டு கொடும் சுரண்டலுக்கும், ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக மக்கள் சமுகத்திலிருந்து பிறப்பெடுக்கின்ற இக்கவிதைகள் அத்துன்பத் துயரங்களைக் கண்டு வேதனைப்படுவதாகவே படுகின்றது. அத்தகைய வேதனைகளுக்கு மத்தியிலும் வாழ்க்கை மீதான காதல் அவரது கவிதைகளில் இழையோடி இருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

உலகளாவிய ரீதியில் மக்களை சார்ந்து நிற்கின்ற இயக்கங்கள் தளர்ச்சியடைந்து - பின்னடைந்துள்ள இச்சந்தர்ப்பத்தில் மக்கள் விரும்பும் உள்ளடக்கத்திற்கும், கலைக்கும், அழகியலுக்கும் இடையிலான உறவு இவ்வாறு வெளிப்பட்டு நிற்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

இருப்பினும் இத்தகைய முகடுதட்டிப்போனதோர் எல்லைப்பரப்பில் தகுதியும், திறமையும் கொண்ட படைப்பாளி தமது காலவோட்டத்தினோடே வெற்றிவாகைச் சூடி நிற்கும் விடுதலைக் கருத்தோட்டத்தைச் சார்ந்து நிற்பாராயின் தமது படைப்பின் தரத்தை உயர்த்த முடியும் என்பதை கடந்தகால வரலாறு புதிய படிப்பினையாக உள்ளது. கவிஞர் கலையரசியும் இத்தகையதோர் மானுட அணியில் கால்பதிக்க வாழ்த்துகின்றேன்.

லெனின் மதிவானம்,
பிரதி ஆணையாளர்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
கல்வி அமைச்சு.

## வலைத்தள வாழ்த்துரை.........

கவிதாயினி கலையரசி அவர்களின் எழுத்து வலைத்தளத்தில் வெளியிட்ட கவிதைகளை புத்தக வடிவில் கொண்டு வர இருப்பது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. தனது முதல் கவிதையை "புன்முறுவல்" என்ற தலைப்பிலே தளத்திலே வெளியிட்டு மோனாலிசாவின் புன்முறுவலை அழகுக்கலை என்று வர்ணிக்கும் இவர் குழந்தையின் சிரிப்பை " கல் மனதை சில்லென்றாக்க சொல்லாமல் சப்திக்கும் மொழி.." என்றார்.

90 ற்கும் மேற்பட்ட கவிதைகளை எழுத்து வலைத்தளத்தில் படைத்துள்ள கலையரசி சமூகப்பிரச்சினைகள் (ஒரு முறையாவது பாருங்களேன்) , பாலியல்,வன்கொடுமை, காமக்கொடூரர்கள் ( அம்மாவின் கணவன்) பற்றி இவர் எழுதிய அவ்வரிகள் வாசிப்பவர் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

கலாபம் என்ற கவிதையும் இந்த வகையை சேர்ந்ததுதான்.

அனுவிலும்
நுழையப்பார்க்கும்
கூட்டத்தின்
மத்தியில்
மண்டியிட்டுக்கிடக்கிறது
கலாப மயில்
என்று ஆரம்பித்து

விகார வடிவம்
பூண்ட அகோர
கூட்டத்தில்
அடங்கிப்போன கலாபி
தன் கலாபம் விரித்து
ருத்ரதாண்டவமாடும்

இனி
அடைமழை
பெய்யும் வரை
காத்திருக்கப்போவதில்லை....

என்று முடித்து பெண்களுக்கு ஏற்படும் கொடுமைகளை சாடுகிறார் நீ என் காதலியானால் என்ற கவிதையில் ஒரு இளைஞனின் காதல் கனவை மிக அழகாக செதுக்கியுள்ளார். வாழ்த்துரை என்பதால் இவரது கவித்திறன் பற்றி அதிகம் எழுதினால் அது விமர்சனக்கட்டுரை ஆகிவிடும் என்பதால் அதை தவிர்க்கிறேன்..

இளம் கவிதாயினி கலையரசி மென்மேலும் பல நல்ல கவிதைகளை வெளியிட்டு சமுதாயம் பயனுற பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்.

அன்புடன்,

பேராசிரியர் இரா.சுவாமிநாதன் M.A.,M.Phil.,Ph.D.
முன்னாள் இயக்குனர் & ஆங்கிலத்துறை தலைவர் காஞ்சி மாமுனிவர் (அரசு) பட்ட மேற்படிப்பு & ஆராய்ச்சி மையம்.
புதுச்சேரி – 605008
ushasme@gmail.com

## அன்புத்தாயே...

அன்புத்தாயே
அழகாக எனைத்தூக்கி
அம்சமாக அலங்கரித்து
அம்புலியை காட்டி சோறூட்டுவாய்....!

ஆருயிரால் இணைந்த நீ
ஆவலுடன் எனையிழுத்து
ஆசை முகத்தில் முத்தமிட்டு
ஆராரிரோ பாடி உறங்க வைப்பாய்......!

இனிய குரலால் நீ பாடும்
இனிய தாலாட்டிலும்- உன்
இரு கைகளும் என் முதுகைத்தட்ட
இமை மூடி எனை மறந்தேனம்மா.....!

ஈன்றவள் நீ
ஈருயிரால் இணைந்தவள் நீ
ஈசன் வந்துனை கேட்டால் கூட
ஈயேனம்மா.....!



உன்
உதிரத்தை எனக்கூட்டி
உயிர் தந்த உன்னை – உன்
உயிர் பிரிந்தாலும் மறவேனம்மா.....!

ஊட்டி வளர்த்தாய் நீ

ஊர் பேச வைத்தாய் நீ

ஊசிமுனை என்மேல் பட்டாலும்

ஊதுலை கனலாவாயம்மா ....!

என்றும்
என் மனம் விரும்புகிறது
என்னுடன் நீயிருக்க
என்னுயிர் மடியும் வரை...!

உன் முந்தானைக்குள்
ஒளிந்து நான் செய்த
குறும்புகள் இன்னும்
நிழலாய் தொடருதம்மா....!

வேலை விட்டு வந்ததும்
வாசல் முற்றத்தில்
எனை உன் மடியில் சாய்த்து
தலைப்பார்க்கும் அழகை
என்னவென்று சொல்ல...?

தேயிலை கறைப்படிந்து
அதில் ஆயிரம் காயங்கள்
இருந்தாலும் நீ எனை தடவும் போது
உன் கையிலிருக்கும் சொர சொரப்பும்
சுகமேயம்மா...!

இரு வளையலை கையில் போட்டு
அடுப்படியில் நீ சமைக்கும் வாசம்
முற்றத்தில் விளையாடும் என்
மூக்கைத்தூண்டி

வாயூறச்செய்யுமம்மா.....!

பசிக்கிறது என்றால்
பட்டினி கிடந்து என்
பசியாற்றுவாயம்மா –உன்
அருகிலமர்ந்து ஒரு பிடி
சாப்பிட்டாலும் அது
அமிர்தமாகுமம்மா....!

குற்றம் செய்யும் போது
தண்டித்து பின் என்னை
அள்ளியனைத்து முத்தமிட்டு அழும்
உன் பிஞ்சு மனம் கண்டு
மேனி சிலிர்க்குதம்மா...!

அட்டைக்கடியாலும்
வெய்யில் மழையானாலும் கஷ்டப்பட்டு
களைத்து நீ வரும் வேளை
அம்மா என்றழைத்ததும்
உன் முகத்தில் வரும் சந்தோஷம்
புதிதாக பூத்த பூவைப்போல
மலருதம்மா....!

இடியினோசை கேட்டும்
பதறாத உன் நெஞ்சம்
என் அழுகுரல் கேட்டதும்
பதறிப்போகுமம்மா...!

விளையாட்டுத்தனமாக
ஒளிந்துக்கொண்டப்பின்
தேடிப்பார்த்து காணாதவிடத்து
இதயம் பட படக்க
முகம் வியர்த்த வடிய
மூளையிலமர்ந்து அழுவாயம்மா.....!

மெதுவாக எழுந்து வந்து
நான் உன் கண்களை – என்
பிஞ்சுக்கையால் மறைத்ததும்
அழுகையோடு உன் இதழோரம் வரும்
ஒரு மௌனச்சிரிப்பு
ஆயிரம் கதைகள் சொல்லுமம்மா..

உன் கை பிடித்துக்கொண்டு
கடை வீதியில் நடந்து சென்று
கண்டதெல்லாம் நான் கேட்ட போது
முகம் சுழிக்காத என் தாயே..........!
கொட்டும் மழையில்
நீ நனைந்து என்னை
உன் புடவை முந்தானையில் மறைத்து
வீடு வரையில் தூக்கி வருவாய்...!

வீடு வந்ததும்
தலையைத்துவட்டி
அடுப்பில் உன் கை காசி
உன் முகத்தில் ஒத்தடம் வைப்பாய்

இலேசாக
காய்ச்சல் வந்தாலும்
பதறிப்போய் உனக்கு
தெரிந்த வைத்தியத்தை
செய்து குணப்படுத்துவாய்...!

உன் அன்பில்
கட்டுண்ட என்னை
ஏக்கங்கள் கூட
ஏறெடுத்துப்பார்க்காதம்மா......

காத்திருந்தாலும்

தவமிருந்தாலும்
உன் தலையனை
சுகம் பெறுவேனோ அம்மா............
நான் பிறந்ததும் சந்தோஷப்பட்டாய்
முதற் பல் முளைத்ததும் சந்தோஷப்பட்டாய்
அம்மா என்றதும் சந்தோஷப்பட்டாய்
முதலடி எடுத்து வைத்ததும் சந்தோஷப்பட்டாய்
நானும் இன்று சந்தோஷப்படுகிறேன்......

காரணம்
கருவறையில் இந்த
கலையை சுமந்து
களங்கமில்லாமல்
கலையாய் வாழ
கற்றுத்தந்ததற்கு.........


# குழந்தையாகிறேன்.....

கணநேரம் கண்விழித்து
சஞ்சாரங்களின் சங்கதிகளை
மீட்டுப்பார்த்தேன்.....
சந்தனம் மனக்கும் ஏகாந்த இரவில்
பௌர்ணமியின் மௌன ராகம்
கேட்டேன்..........
தன் உடல் துளைத்து
இசைத்தந்த மூங்கில் குழலின்
ஒலியை இரசித்தேன்...
தேன் சுமக்கும் பூஞ்சோலைதனில்
வர்ணம் கொண்ட
புதுமலரைப்பார்த்தேன்....
கால்தடம் பதித்துப்போன
கடற்கரையின்
சோகம் கேட்டேன்...
எழுவர்ணம் சுமந்துப்பறக்கும்
வானவில்லின் அழகை
பார்த்தேன்...
என் கண்ணீர் கன்னம் நனைக்கும்
வேளைகளில் அநாதையாகிறேன்..
ஆனாலும் என் இயற்கை
அன்னை மடியில் குழந்தையாகிறேன்...



# மரணித்த மனிதம்......

என்னவாயிற்று..?
ஐயையோ....!
யார் செய்தது..?
என்ன..?
நம்பமுடியவில்லையே...!
ஐயோ பாவம்....!
கலிகாலமப்பா...!
கடவுளே....!!!
கேட்க சகிக்கவில்லை....
குருட்டுப்பெண்ணா..?
இறந்தே விட்டாளா...?
அநாதை என்றும்
சொல்கிறார்கள்..!
நான்கு பேராம்...!
பாவம் பிள்ளை
திணறியிருப்பாள்...!
சுய புத்தியை
அடகு வைத்தவர்களின்
சதியாகத்தான் இருக்கும்....!
போதுமப்பா போதும்...
கண்ணீர் முட்டுகிறது...
நெஞ்சம் கனக்கிறது...
மனிதம் இறந்துவிட்டது..
ஆமாம்.... மனிதம் இறந்தேவிட்டது...!!!



## கொழுந்துப்பெண்...

கூடையையும்
கொழுந்தையும்
கங்காணியையுமே
கனவில் கண்டாள்
அப்போது....

காரையும்
பணத்தையும்
பங்களாவையுமே
கனவில் காண்கிறாள்
இப்போது.....

கொங்காணியும்
கொக்கணியுமே
உறவாகவிருந்தது
அப்போது....

கைப்பேசியும்
கொத்துசாவியும்
உறவானது
இப்போது.....

பாதி ரொட்டியையும்
பகிர்ந்து உண்டு
மகிழ்ச்சியை பரிமாறியது
அப்போது....


கழுத்து சங்கிலியையும்
காதுகம்மலையும்
கண்டு பொறாமையாய்
பரிணமித்தது
இப்போது.....

# காதல் வழக்கு......

உன் மேல் நான்
காதல் வழக்கு தொடுத்தேன்
என் கடிதங்கள்
உன் கண்களெனும் நீதிமன்றத்தில்
எனக்காக வக்கீலாய் வாதிட்டன
என் இதயமும் சாட்சிக்கூண்டில்
சாட்சியாய் ஆஜரானது....

இந்த வழக்கு
விடுதலையாகுவதற்கல்ல
ஆயுள் கைதியாகுவதற்கு

சாட்சியங்கள் செல்லுபடியாகின
என உன் சிரிப்பு
தீர்ப்பு வழங்க
உடனே என் உயிர்
உன் உயிருக்கு விலங்கிட்டு
என் இதயச்சிறையில்
ஆயுள் கைதியாக்கிவிட்டது.....





# உன் முகம் காண.....

உன்
முகம் காண

கண்டறியா
காலங்களையும்
கணப்பொழுதில்
கிழித்துப்பார்த்தேன்...

பிரபஞ்சத்தின்
பிற்கால
பக்கங்களையும்
அலசி ஆராய்ந்தேன்....

தொலைதூரத்தில்
தொலைத்துவிட்ட
சலனங்களையும்
தேடிப்பார்த்தேன்....

விசித்திரங்களின்
விந்தைகளையும்
வியந்து
விமர்சித்தேன்....



காணா உன்முகம்
காண சொர்க்கத்தின்
விலாசத்தை காதலிடம்
கேட்டறிந்தேன்.....

நிபந்தனைக்குட்பட்ட
பிரதேசங்களிலும்
உத்தரவின்றி
பிரவேசிக்கின்றேன்

என் மரணத்திற்கு
முன்பாவது உன்னை
சந்தித்துவிடலாம்
என்ற நப்பாசை
உன் பிள்ளைக்கு
உண்டு என்பதால்.....

# மன்னிக்கலாமா..?

புரியாத புதிருக்கு
புதைக்கப்பட்ட
மர்மங்களில்
விடை தேடுகிறேன் நான்...

புரிந்தாலும்
புரியாததாய்
மறந்ததை
மறந்து தேடுகிறாய் நீ...

சுதந்திர காற்றை
சுவாசித்து
சுற்றித்திரிகிறேன்
நான்...

நட்சத்திரங்களின்
நடுக்கத்தையும்
நாட்டாமை
செய்கிறாய் நீ...

எட்டாக்கனிக்கு
ஏணிவைத்து
எட்டிப்பார்க்கிறேன்
நான்...

பஞ்சம் என்றால்
பௌர்ணமி நிலவில்
தஞ்சம் புகுந்து
மஞ்சம் கொள்கிறாய் நீ...



பிரபஞ்சம்
பிய்த்தெறிந்து
பிரச்சினைக்கு
பிரசவம் பார்க்கிறேன்
நான்...

நினைவுகளை
சிதறடித்து
சிக்கல்களுக்கே
சிரமம் கொடுக்கிறாய் நீ..

நடைபெறா
நாடகத்திற்கு
மேடையிட்டு
மேளம் கொட்டுகிறேன் நான்...

அலாதி இன்பம்
கண்டு — என்
அஞ்சனம் கரைக்க
சதி செய்கிறாய் நீ...
உலகமே நீ
என்கிறேன் நான்...
உலகத்தில் நீயும்
ஒருத்தி என்கிறாய்
நீ.....

சொல்லுங்கள்
மன்னிக்கலாமா..?

# அறிந்தவனானேன்......

நேசிக்க வைத்தாய்
சுவாசிக்க வைத்தாய்
யாசிக்க வைத்தாய்
இப்போது ஏன்
யோசிக்க வைக்கிறாய்...?

காதல் கொண்டாய்
கூடல் கொண்டாய்
ஊடல் கொண்டாய்
இப்போது ஏன்
மோதல் கொள்கிறாய்..?

மோகம் கொண்டாய்
தாகம் கொண்டாய்
வேகம் கொண்டாய்
இப்போது ஏன்
மௌனம் கொள்கிறாய்?

அன்பு என்றாய்
விரும்பு என்றாய்
நம்பு என்றாய்
இப்போது ஏன்
பெரும் வம்பு என்கிறாய்...?

செல்லம் என்றாய்
வெல்லம் என்றாய்
பவளம் என்றாய்
இப்போது ஏன்
தொல்லை என்கிறாய்...?

விளக்கம் கேட்டேன்
விலகி செல்கிறாய்
குழப்பம் கொண்டேன்
குறுகி நிற்கிறாய்....

வீதியில் யாரோ
விமர்சிக்கிறார்கள்
ஐயோ பாவம்
கிறுக்கல்களிடம் பேசுகிறான்
கிறுக்கனென்று....

அறிவிலி நானே
அறிந்தவனானேன்
நான் என்றோ அவளால்
ஏமாற்றப்பட்ட
பைத்தியமென்று.....

# இன்னுமொருமுறை...

என் தாய்க்குள்
கால் முடக்கி
சுருண்டுப்படுக்க
வேண்டும்
இன்னுமொருமுறை....

என் தந்தை
முதுகிலேறி
யானை சவாரி செய்ய
வேண்டும்
இன்னுமொருமுறை.....

என் பள்ளிப்படியில்
கால் பதித்து
கட்டுச்சோறுண்ண
வேண்டும்
இன்னுமொருமுறை.....

என் அலுவலக
கணினி பார்த்து
கலியுகம் புரட்ட
வேண்டும்


இன்னுமொருமுறை.....
என் மணாளன்
கைக்கோர்த்து
மாங்கல்யம் சூடிக்கொள்ள
வேண்டும்
இன்னுமொருமுறை.....

என் குழந்தையின்
பிஞ்சு நகம்
என் மார்பை கிழிக்க
வேண்டும்
இன்னுமொருமுறை.....

என் முதுமையில்
நரை விழுந்து
கைப்பிடி காலாக
வேண்டும்
இன்னுமொருமுறை.....

நான்
இறந்தும்
பிறக்க
வேண்டும்
இன்னுமொருமுறை.....

# க(இ)ஷ்டம்.......



விளையாடி வீடு திரும்பி
அம்மா...
சட்டையில் சிவப்பு மை
என்றேன்....
முகத்தில் மஞ்சள் பூசி
பெரியவள் என்றார்கள்...

தாவணி கட்டி
பழகும் முன்
பத்து பேரை கூட்டி வந்து
பருவ மகளை அமரச்செய்து
மஞ்சள் கயிறு கட்டி
மாமன் காலில் விழச்சொன்னார்கள்
ஏனென்றேன்
திருமணமென்றார்கள்......



கணவன் தன்
கைப்பிடித்து
வீட்டுக்காரி என்றான்
மூன்றே மாதங்களில்
என் அத்தை என்னை
வேலைக்காரி என்றாள்.....

முழுசாய் முளைக்காத
பிஞ்சுப்பிண்டத்தை
வயிற்றில் சுமந்து
வெட்டியோடு திரும்பினேன்
என் வீட்டிற்கு
நிம்மதி கிடைக்குமென்று....

என் அமைதி
ஐந்து நிமிடம் நீடிக்கவில்லை
என் தலைவலிக்கு
என் வீட்டுத்தலைவலி
தைலம் பூசியது....

படிக்கப்போகிறேனென
நடித்துக்கொண்டு
படிதாண்டும் தங்கை..
வைத்தியசாலை கட்டிலில்
கனாக்காணும் தம்பி...
வீட்டுக்குள்ளேயே
விறகொடிக்கும் அப்பா...
எழுந்து நிற்க
கொழுந்து பறிக்கும் அம்மா...
ஈசலாய் வாழ்ந்தாலும்
பீனிக்சாய் திரும்பவே
எண்ணுகிறேன்....

பக்குவப்பட்டதாலோ என்னவோ
என் கண்மையை கரைக்க
கண்ணீரும் மறுக்கிறது...
ம்ம்...
நானும் கூட
ஒரு வகையில் பலசாலிதான்
காரணம்


கடவுள்
தாங்கிக்கொள்ளும்
திறனுடையவனுக்கே
கஷ்டத்தையும்
இஷ்டத்தோடு
அள்ளிக்கொடுப்பான்...

# கலையாத சோகம்......

விசிறித்தள்ளிய
காற்றும்
விடியா
இரவும்
வியாபித்த
வானமும்
வியாக்கியானம்
பேசுகையில்

பாதை
தவறிய பட்டாம்பூச்சியும்
தலைக்கனம்
தலைக்கேறிய தவளையும்
பவித்திரம்
பழகிய பாம்பும்
என்
தலைவிதியின்
தலையங்கத்தை
விமர்சனம் செய்கின்றன...

இவன் அழித்து
அழிந்தவனா?
இல்லை
அளித்து அழிந்தவனா
என்று..



ம்ம்....
நான்
இழந்து
அழிந்தவன்

இலை சருகு கொண்டு
வீடமைத்து
பறவையினங்கள்
அமைதியாயிருக்க
அந்துபோகும்
எச்சில் நூல்கொண்டு
வீடு தைத்தபடி
சிலந்தியும்
சிரித்தது
எனைப்பார்த்து

நானும்
சளைத்தவனல்ல
சுவரில்லா
அறைக்கும்
வாசலில்லா
கதவிற்கும்
காலில்லா
கட்டிலுக்கும்
உரிமையாளனென்று
மார்தட்டிக்கொண்டேன்

அவ்வப்போது
என் வறள் நிலக்
கட்டில் வரைந்த
வெடிப்பில் நான்
என் கண்களை
கசக்கிப் பிழிவது
அச்சிலந்திக்கு
தெரியவாபோகிறது?

## சாத்தான்

நட்ட நடு
ராத்திரி
கொட்டும்
மழை....
தொலைதூரத்தில்
ஓநாய்களின்
ஓலச்சத்தம்...
அருகில்
ஆந்தைகளின்
அலறல்....

இடையிடையே
எட்டிப்பார்க்கும்
பயம்...
சரசரக்கும்
இலைச்சருகு
சலசலக்கும்
சதங்கை மணி...
திடீரென்று
திசைத்திரும்பும்
ஊதைக்காற்று....

பயத்தில்
தொண்டை
நனைக்கும் எச்சில்
முகத்திரையில்
விளையாடும்
வியர்வை...!
உடம்பை
எரிக்கும்

உஷ்ணம்
எட்டுத்திக்கையும்
அலசும்
கண்கள்
அண்டவெளிக்கும்
பாதாளத்திற்கும்
பயணிக்கும்
மூச்சிக்காற்று
குறுக்காக
நடக்கும்
நிழல்போல்
ஒருருவம்....!

கடவுளின்
பெயரை
உச்சரிக்கும்
உதடு....!
செக்கனையும்
எட்டிப்பிடிக்கும்
இதயத்
துடிப்பு...!
வாய்விட்டு
வரமறுத்த
வார்த்தைகள்

யுகங்களாய்
உறைந்திருந்த
வாழ்க்கையில்
மானிட வரவு
உணர்ந்து
திக்கற்றுப்பறந்திருந்தது
சாத்தான்....

# தனிமை

காலனவன் வரவில்லை
கன்னி மனம் தூங்கவில்லை
வாழ்ந்திருக்க ஆசையில்லை
வாழவைக்க யாருமில்லை
என்றுதான் தணியும்....?

ஏகாந்தம் துணையிருக்க
ஏக்கம் குடியிருக்க
ஆணவம் படர்ந்திருக்க
ஆத்திரம் கணை தொடுக்க
என்றுதான் தணியும்....?

பாழ்ங்கிணறு திறந்திருக்க
அடைப்புகள் நகர்ந்திருக்க
மரணம் அழைத்திருக்க
மேனி நடத்திருக்க
என்றுதான் தணியும்....?

வெய்யில் சுட்டெரிக்க
புடவை தொட்டணைக்க
தண்ணியிலாக்காட்டில்
தன்னந்தனியாய் நானிருக்க
என்றுதான் தணியும்....?



ஓலைக்குடிசையிருக்க
ஒத்தைப்பாய் சுருண்டிருக்க
பழைய பானை இரண்டிருக்க
இடிந்த ஓர் அடுப்பிருக்க
என்றுதான் தணியும்....?

பட்டப்பகலில்
விறகொடிக்க நான் செல்ல
தொட்டுத்தூக்கி தலையில்வைக்க
யாருமில்லை என் செய்ய
என்றுதான் தணியும்....?

சுடுமண்ணில் கைவைத்து
வள்ளிக்கிழங்கொன்று நான் தேடி
பவ்வியமாய் மடியில் கட்டி
கூட்டிவந்தேன் சமையலுக்கு
என்றுதான் தணியும்....?

நான்
தனிமைக்கு
தத்துப்பிள்ளை....
ரணங்களின்
ரகசிய தோழி.....

## கள்ளி........

அடியே

ஏனுங்க மச்சா.....

வாய்க்கா வழியோரம்
வயக்காத்து வீசுதடி
வயக்காத்து வீசயில
வாசமுல்ல நீயும் வர — என்
வாட்டமெல்லாம் போகுதடி....

ஒத்தையில நின்டவரே
ஓரக்கண்ணில் பார்த்தவரே
ஓ தந்திரங்கள்
நானறிவேன்
ஓரமா தள்ளி நில்லு.....

பக்கத்துல வந்தவளே
பாசக்கார தேன்மலரே
பத்தரமாய் நானிருக்க
பத்திரமாய் நீயிருக்க — என்
பட்டினியும் பறக்குதடி......

பொய் சொல்லி
பொறி திருடும்
அய்யாவு மச்சானே
நா காது குத்தி கணநாளு
சங்கதியே தெரியாதா?
சொந்தமுன்னு

சொல்லிக்கொள்ள
சொர்க்கத்திலும் சொல்லலியே
சொந்தக்காரி நீயிருக்க
சொத்தெதுவும் தேவையில்ல....

சொத்தெதுவும் இல்லாம
சொந்தக்காரி ஒனக்கெதுக்கு
மண்ண வெட்டி
மாட்ட கட்டு
நல்ல காலம்
ஒனக்கிருக்கு....

ஓல குடிச போட்டு
பல வாரம் ஓடிப்போச்சி
பந்தலுக்கு நாள்குறிக்க
சொல்லு புள்ள
ஒத்த சொல்லு....

மாமனாரு மாரிமுத்து
மாமியாரு மரிக்கொழுந்து
பெத்தெடுத்த மகராசா....
ஓ கண்ணுக்குள்ள நானிருக்கே...
ஏ நெஞ்சுக்குள்ள நீயிருக்க....

வெட்கத்துக்கு
பொறந்தவளே
வெள்ளக்கார
வெள்ளரியே...
நாளைக்கே நா வாறே
பத்திரமா போய் சேரு.......

# கணவனின் கல்லறையில்


காதல் கானம்
காதுகளில்
சேர்ந்து இரசித்தோம்
நீயும்.....
நானும்......

மஞ்சள் தாலி
கழுத்தில்
காவியம் படைத்தோம்
நீயும்.....
நானும்......

ஒற்றைப்போர்வை
தேகத்தில்
தொலைந்ததை தேடினோம்
நீயும்.....
நானும்......

செல்லச்சண்டைகள்
இடையில்
ஊடல் கண்டோம்
நீயும்.....
நானும்......

மல்லிப்பூச்சரம்
தலையில்
கூடல் கொண்டோம்



நீயும்.....
நானும்......

பிஞ்சுப்பிரபஞ்சம்
வயிற்றில்
இன்பத்தில் திளைத்தோம்
நீயும்.....
நானும்......

மழைத்துளிகள்
நிலத்தில்
கீழ்விழாமல் தட்டிக்கொடுத்தோம்
நீயும்.....
நானும்......

பிரளயம் அரங்கேறியது
ஆழியில்
செத்துப்பிழைத்தேன்
நான் மட்டும்....

உறையும் நிமிடம்
என் மனதில்
நித்திரையில் நீ.....
புற்தரையில் நான்....
கருவறையில் உன் எச்சம்.....

## மலடியின் தாலாட்டு

என் பிறப்புக்கு
பெருமை
தேடிக்கொண்டேன்
நான் என்
பெண்மையை
உணர்ந்தப்போது.....

மொட்டுக்கள்
பல விரிந்தன....
பட்டாம்பூச்சிகள்
சிறகடித்தன...
எண்ணங்கள்
எல்லைமீறின....

என்
வறல்நிலத்திலும்
வசந்தகாலம்
துளிர்விடத்தொடங்கிவிட்டது......

திட்டியவர்கள்
திகைத்துப்போனார்கள்
சபித்தவர்கள்
சப்தமிழந்துப்போனார்கள்
ஒதுக்கிவைத்தவர்கள் கூட
இப்போது இல்லை...

உடலிலும்
உணர்விலும்
ஏதோ ஓர்
இரசாயனத்தாக்கம்
அடிக்கடி
புல்லரிக்கிறது....

கண்ணாடி முன்
பலமுறை
வெள்ளோட்டம்
அப்போதெல்லாம்
என் பெருத்த வயிறை
மறந்து தடவிக்கொடுக்கும்
கைகள்....

பிள்ளைக்கு
பெயர் வைத்தே
தீர்ந்துப்போனது
பேனா மை...
இளைப்பாற
இடம் தேடியது
காகிதம்...

இத்தனையும்
நடக்க வேண்டும்
என்பதே என் அவா

இந்த மலடியின்
கனவும்
மெய்ப்பட வேண்டும்
காத்திருப்பேன்
எனக்கும் கூட
தாலாட்டுப்பாட தெரியும்.....



## விதியின் சதியில்

கதவு நிலையில்
கால்வாசி உயரம்கூட
வளரவில்லை
பறிகொடுத்துவிட்டான்
பாதி சந்தோஷத்தை...

ரணங்களுக்கு மத்தியிலும்
ராட்டிணம் சுத்தி
விளையாடுகிறது
விளையாட்டுப்புத்தி

பரிதாபக்கண்கள்
அவனை
சுற்றிவளைத்தன...
அனுதாபக்கைகள்
அவனை
தடவிக்கொடுத்தன...
ஏதுமறியா
அந்தப்பிஞ்சு நெஞ்சு
கலர்பானத்தை
சுவைத்துக்கொண்டிருந்தது....

கனமுகங்களை
கண்ட பின்பும்
கனக்கில்லாமல்
ஓடித்திரிகிறது
கால்கள்.....

எத்தனையோ பேர்
அழுக அவன்
கண்ணில் மாத்திரம்
கபடமில்லா ஒரு தெளிவு...

அம்மாவிடம் ஓடி
அப்பா ஏன்
படுத்திருக்கிறார்
என்று கேட்கிறான்
பின் பதிலறியாமலே
ஓடிவிடுகிறான்.....

நண்பர்களுடன்
கூட்டு சேர்ந்தப்பின்னர்
ஓடி வந்து
அப்பாவை எழுப்புகிறான்
பின்னரும் ஓடிவிட்டான்
நானும் பின் தொடர்ந்தேன்
அவன் அவனது
நண்பர்களிடம் சொல்கிறான்
"அப்பா தூங்குகிறார்
நாம் நாளைக்கு விளையாடுவோம்"

வற்றிப்போன வார்த்தைகளிடையே
சிக்கிச்சிதறியது
என் சிந்தனைகள்
கண்களில்
கண்ணீர் மட்டும்
பிரசன்னமானது
அவனுக்காக....!!!

## ஆட்டுக்காரி

அடியே

அலமேலு...

எங்கடி போன..?

ஏன்டியம்மா

தங்கம்

இப்படி

அங்கம் பதற

கத்துற?

ஆறுமணி

ஆகிப்போச்சி

வெளக்கு வைக்க

நேரமாச்சி...

ஆடுமேய்க்க

போன புள்ள

வீடு வந்து சேரவில்ல...

மச்சா இப்ப

வருவாக

மதி கலங்கி

நிப்பாக

புள்ள வளக்க

தெரியலனு

பொடனில மிதிப்பாக

மாமனுக்கு

மடி கொடுத்து

மாசமா

நிக்கயில

எத்தனயோ நெனச்சி வச்சே

பொட்ட புள்ள

பொறக்கு முன்னு

குறியார்த்து

தெரிஞ்சிருந்தா

கள்ளி மரம் நாவளத்து

பக்குவமா முடிச்சிருப்பே

கிழிஞ்ச துணி

நா தச்சி

மானத்த மறைக்கயில

பாவிமக குத்தவச்சி

தொலச்சிப்புட்டா

வாய கட்டி

வயித்த கட்டி

பந்த கால

நா போட

மாமே மொறச்சாக

மத்தவக சிரிச்சாக

அஞ்சி மணி

ஆச்சிதுன்னா

வீடு வந்து

சேராம

சிரிக்கி மவ

இளிச்சிக்கிட்டு

எங்க போயி

நிக்கிறாளோ....?

முச்சந்தி

முனியான்டி

மூனுகன்னு

முண்டக்கன்னி

ஏம் புள்ள அலமேலு

முழுசா வந்து
சேர வேனும்...

போடியக்கா
பொன்னாத்தா
காத்து கருப்பு
வருமுன்னே
நா போயி
கூட்டியாறே....
மாமே வந்தா
சொல்லி புடு....

## சுரம் தந்த வரம்

புருவம் அசைத்தாய்
புல்லாங்குழல் இசைத்தேன்....

கண் ஜாடை செய்தாய்
கடம் இசைத்தேன்....

மன்றாடி வேண்டினாய்
மத்தளம் இசைத்தேன்....

வாயாடிப்பேசினாய்
வயலின் இசைத்தேன்....

பிடிவாதம் பிடித்தாய்
பியானோ இசைத்தேன்....

வீதியில் நடந்தாய்
வீணை இசைத்தேன்....

செல்போன் பேசினாய்
சைலபோன் இசைத்தேன்....

பக்கம் வந்தாய்
பறை இசைத்தேன்....

தயங்கி நின்றாய்
தம்புரா இசைத்தேன்....

இருமி நின்றாய்
உறுமி இசைத்தேன்....

கோபம் கொண்டாய்
கோடாங்கி இசைத்தேன்....

தலை கோதினாய்
தபேலா இசைத்தேன்....

தலைவனென்றாய்
தவில் இசைத்தேன்....

இனியும்
தம்பட்டம்
இசைப்பேன்
நீ என்
சுரம் தந்த
வரம் என்று.....

பெண்ணே....

நகர்ந்த
பொழுதுகள்
என்னுள்ளே....

தென்றலுக்கும்
அவள் கூந்தல்
தீண்ட ஆசை
அடிக்கடி
கலைத்துவிடுகிறது

அதை
சரிசெய்யும்
அவளது விரல்களுக்கு
நொடிக்கொரு முறை
கொண்டாட்டம்

காதோரம்
கதைப்பேச
காரணம் தேடும்
கம்மல்...!

புருவ மத்தியில்
புதைந்து
புகார் தேடும்
குங்குமம்...!
கழுத்தோரம்
காத்துக்கிடந்து

புண்ணியம் தேடும்
ஒற்றைச்சங்கிலி

மணிக்கட்டில்
மாட்டிக்கொண்டு
பொழுது கடத்தும்
கடிகாரம்

விரலிடுக்கில்
நுழைந்துக்கொண்டு
கபடம் கற்கும்
கணையாழி

பாதங்களில்
பதுங்கியிருந்து
ஜென்மம் கழிக்கும்
சதங்கை

எனக்கும்
விமோசனம்
வேண்டும்
உன் தீண்டலில்....

## நீ எனக்கு

மூனாங்கிளாசு படிக்கயில
மூக்கொழுகி நின்டவளே
முத்தழகி நீயெனக்கு
மூத்தரசட்டி நானுனக்கு.....!

நாலாங்கிளாசு படிக்கயில
நச்சரிச்சி நின்டவளே
நந்தவனம் நீயெனக்கு
நாத்தக்குப்ப நானுனக்கு....!

அஞ்சாங்கிளாசு படிக்கயில
அர மனச பறிச்சவளே
அத்த மக நீயெனக்கு
அழுக்குமூட்ட நானுனக்கு....!

ஆறாங்கிளாசு படிக்கயில
ஆள சாச்சி போனவளே
புண்ணியவதி நீயெனக்கு
புளுகுமூட்ட நானுனக்கு....!

ஏழாங்கிளாசு படிக்கயில
ஏறெடுத்துப்பார்த்தவளே
முழியழகி நீயெனக்கு
முட்டக்கண்ணே நானுனக்கு.....!

எட்டாங்கிளாசு படிக்கயில
எடபோட்டு சிரிச்சவளே

சோள பொம்ம நீயெனக்கு
சோத்துமூட்ட நானுனக்கு

ஒன்பதாங்கிளாசு படிக்கயில
ஒளிஞ்சி நின்டு சிரிச்சவளே
ஒல்லிராணி நீயெனக்கு
ஒதவாக்கர நானுனக்கு......!

பத்தாங்கிளாசு படிக்கயில
குத்தவச்சி போனவளே
சதிகாரி நீயெனக்கு
குடிகாரன் நானுனக்கு.....!

## பூப்பூக்கும் ஓசை.....

கன்னம் சிவந்தது
கண்கள் வெளுத்தது
சூலொன்று வெடித்து
மொட்டு மலர்ந்தது.....!

பிள்ளை வளர்ந்தது
இளமை கண்டது
கண்ணாடி பார்த்து
வெட்கம் வெருத்தது....!

மார்பு உயர்ந்தது
தலை பணிந்தது
பூவொன்று சிரித்து
சிட்டு பறந்தது.....!

நாட்கள் நகர்ந்தது
நேரம் சொன்னது
பாவாடை களைந்து
தாவணி கொண்டது......!

பகுடி குறைந்தது
பக்குவம் முளைத்தது
மஞ்சள் பூசி
மங்களம் கொண்டது.....!

சொந்தம் வந்தது
பந்தம் கொண்டது
மந்திரம் சொல்லி
வைபவம் முடிந்தது.....!

மென்மை பிறந்தது
தன்மை மறந்தது
பருவம் மாறி
பெண்மை சுமந்தது....!

## மத்தாப்பூ......

நர்த்தனம்
புரியும்
நயனங்களின்
தேடலில்
இவ்வாரம்
சேலைகளும்.....
சுடிதாரும்.....

அண்டவெளியில்
பிரம்மாண்ட
போட்டி
அதிகம்
பிரகாசிப்பது
வானவெடிகளா......?
வால்வெள்ளிகளா....?

வைத்தியசாலை

கட்டில்களுக்கும்
பஞ்சமில்லை....
ஏனெனில்....
சிலர் வெடிப்பில்
சிதறுவது
கைகளும்.....
கால்களும்.....

விஷேசத்திற்கு
மத்தியில்
சௌக்கியத்திற்கு
நலம் விசாரிக்கும்
பானங்கள்....???
இல்லை....
மதுபானங்கள்.....

இன்னொரு பக்கம்......

தென்றலின்
சுரத்திற்கு
தலையசைத்து
நடமிடும்
தீபங்கள்

மத்தாப்பூக்களுக்கு
பின்னால்
பூத்துக்குலுங்கும்
மழலையின்
சிரிப்பு பூக்கள்

மறந்து போன
சொந்தங்களை
விரைந்து தேடும்
அழைப்பேசி....
விருந்தாளிகள்
என்று வீட்டு
வாசல் வந்து
கரையும் காகம்.....

ஊர் சுற்றி
திரிந்திருக்கும்
திண்பண்டம்
சுமந்த
ஒற்றைத்தட்டு....

கறுப்பு
தினங்களும்
வெளுக்கும்
பழையன கழிந்து
புதியன புகும்
இன்றுதான்

அந்த
சூரனும்
ஒருவேளை
பொறாமைப்படுவான்
கலியுக
களிப்பு கண்டு....

# களவொழுக்கம்

நிலவும்
வெட்கி
அரைமுகம்
மறைத்தது
உன் அணைப்பில்....

நொடிகள்
நீளமுன்னரே
குறையத்தொடங்கியது
அங்குலம்...

உன் கசக்களின்
பக்குவத்தில்
கன்னிமனம்
பேதலித்ததோ
என்னவோ?
தேயத்தொடங்கியது
சுரம்....

உன் கைகளுக்கு
என்னதான்
கோவம்
வருடலுக்கு
மத்தியில்
கிள்ளியும்
வைக்கிறது....

உதடுகள்
வியர்க்காதென்று
யார் சொன்னது
உன் உதட்டுப்பின்னலில்
அது பொய்யென்றுணர்ந்தேன்.....

உன் அதரமது
அதிமதுரம்
சுரக்கும்
குவளையென்று
புரிந்தேன்

சிலிர்த்துவிட்ட
மயிர்க்கால்களுக்கு
போர்வைத்தந்தது
உச்சந்தலை
தொட்ட
உஷ்ணம்....

இடைவெளியை
நிரப்ப
முயற்சித்த
காற்றும்
தோற்றுப்போனது....
நுரையீரல்
தொட
யாசகம்
செய்தது
மூச்சுக்காற்று...

வார்த்தைகள்
பேச மறந்து
முனகல்
பழகியது....

பற்றிக்கொண்ட
மூங்கில் காட்டின்
வெப்பம்
கடந்தது
என் யாக்கை
வளர்த்த தீ...

தீர்ந்தும்
தீராது
தீண்டல்
மொய்த்தலில
களைந்தது
கூந்தல்....

உன்
களவொழுக்கம்
நீடிக்குமா...?
இல்லை
கற்பொழுக்கத்தில்
முடியுமா.....?

## மாற்றம்தான்

கணினியில்
கண் புதைந்தால்
கட்டெறும்பு
கடிப்பதும்
களிப்புதான்

பள்ளிப்படிப்பு
பகுடி என்றால்
பாடப்புத்தகம்
நாடார் கடை
படிக்குதான்....

மாலை சீரியல்
சிறப்பென்றால்
வீடு வரும்
கணவனுக்கு
மின்வெட்டுதான்...

இரு மனம்
சேர்ந்து
ஒரு மனமானப்பின்
விவாகரத்து
விளையாட்டுதான்...
குத்துவிளக்கின்

உபசாரம்
பிழையென்றால்
சிவப்பு விளக்கின் வி...சாரம்தான்.....
தலைவன்
கள்ளுக்கடை
விருந்தாளியென்றால்

தாலி
அடகுக்கடை
அடிமைதான்....

சண்டைகளின்
பாதை
கதையென்றால்
கெட்டவார்த்தைகளின்
பயணம்
தொடர்கதைதான்.....

மோகத்தின்
தாகம்
வேகமென்றால்
கொலைகளின்
அரங்கேற்றம்
கருப்பையில்தான்....

எண்ணங்கள்
சிறுமையென்றால்
நாகரிகத்திற்கு

பெருமைதான்......

## தொடரும் பயணம்

சத்தியம்
சரித்திரம்
படைக்கும் போது
சித்திரம்
வரைவேன் நான்
அரிச்சந்திரனின்
பரம்பரை
உதிரவில்லையென்று....

போராட்டம்
புதைந்து
பாலைவனம்
சோலைவனமாகும் போது
காந்தியை மீண்டும்
கூட்டிவருவேன்
நான்
அஹிம்சை
புகட்டுவதற்கென்று....

அநீதி செத்து
நீதி வாழும் போது
நீதி தேவதையின்
கண் திறப்பேன்
நான்
தர்மம் காப்பதற்கென்று....




வேஷம்
களைந்து
நேசம்
பூணும்போது
துரோகக்காட்டிற்கு
பாசத்தீ
வைப்பேன் நான்
தடயம்
இழப்பதற்கென்று....

விபச்சாரம்
அழிந்து
சம்சாரம்
செழிக்கும் போது
காவியம்
படைப்பேன் நான்
இராமாயணம்
பாகம் இரண்டென்று.....

கொலைகள்
துறந்து
மரணம்
தற்கொலை
செய்யும் போது
எமனுக்கும்
தைலம்
பூசுவேன் நான்
தலைவலி
தீர்ப்பதற்கென்று........

# இறந்துப்போனவள்




இறந்துப்போனவள்
நான்தான்....

உன் மனதில்
நின்று
தொலைந்து
போனவள்
நான்தான்....

உன் நினைவில்
நின்று
மறைந்து
போனவள்
நான்தான்....

நம்
உறவின்
இடைவெளி
நிரப்பத்தவறியவள்
நான்தான்.....

உன்
அன்புச்சிறையில்
அறையப்பட்டவள்
நான்தான்....



உன் முகம்
காணாமல்
என் விம்பத்திரையை
இழுத்துப்போர்த்தியவள்
நான்தான்.....

உன்
கரம் தீண்டும்
தேகம்
தொலைத்தவள்
நான்தான்....

உன்
வெள்ளேந்தி
சிரிப்பிற்கு
வெள்ளையடித்தவள்
நான்தான்.....

மடியேந்தும்
மழைத்துளியை
விட
உன்
கண்ணீர்
திவலையை
சுமப்பவள்
நான்தான்....

கல்லறைக்குள்ளே......

## வெட்டிவைத்த புதைக்குழி

அவன்

வெட்டிவைத்த
புதைக்குழி
இயமன்
திட்டமிட்ட
சதியடி....

சத்தமிட்ட
மழைத்துளி
செய்துவிட்ட
பிழையடி....

விரிந்து போன
பிளவதில்
சரிந்து போனது
மலையடி....

இடிந்து
விழுந்த மண்ணதில்
மடிந்து போனது
மலரடி....

தூங்கிப்போன
நொடியதில்
தூக்கிப்போனது
விதியடி....

கழுவிப்போன
நீரதில்
நழுவிப்போனது
வீடடி.....

மக்கிப்போன
திக்கதில்
சிக்கிப்போனது
உயிரடி....

செத்துப்பிழைத்த
சிலருக்கும்
பித்துப்பிடித்தது
பாரடி

கட்டிய
மனையும்
கட்டிய
மணவாளனும்
புதைந்துபோனதேனடி

பெற்றெடுத்த
செல்வமும்
கண் திறக்கும்
முன்னமே
கருகிப்போனதேனடி.....?
ஒட்டி வந்த
சொந்தமும்

கூட வந்த
பந்தமும்
பிரிந்துபோனதேனடி...?

பள்ளி
பார்க்கும்
முன்னமே
பரலோகம்
பார்த்ததேனடி...?

கண்கள்
பெய்யும்
சிறுதுளி
உள்ளம்
கதறுது
கேளடி......

## ஆயா மரம்

“ஆயா
படுத்துருக்காக
கும்புட்டுக்கோடி”
ஆத்தா
சொல்வாக....
நானும்,தம்பியும்
கும்புட்டுக்குவம்...

அடுத்த நாளும்
சொல்வாக
“பாத்தியால
ஆயா
எம்புட்டு
பெருசா
வளந்துருச்சினு....?”

ஒன்னுமில்லேங்க
ஆயாவ
பொதச்ச
எடத்துல
மாமரம்
நட்டுருக்காக
அதத்தே
எங்க ஆத்தா
ஆயானுது...
மைக்காநாள்
மாம்பழம்

கொத்து கொத்தா
காய்ச்சித்தொங்கும்
பேய்க்காயினு
எவனும்
புடுங்கமாட்டாய்ங்க.....

எங்க ஆயா
எங்களுக்கதே
கொடுக்குதுனு
அம்புட்டயும்
புடுங்கி
மொளகா வொடி
உப்பு தடவி
அவிங்கள
பாக்கவச்சி
திம்பம்.....

பரீட்சைக்கு
போகயில
ஒரு பக்கம்
விடியமுன்ன
எந்துருச்சி
ஆயா மரத்துக்கு
கீழ மண்ணெடுத்து
வச்சிக்கிட்டு
வீராப்பா திரிவம்....

பச்சமரம்
கொஞ்சம்

பட்டு போனாக்கா
ஆயாவுக்கு
ஜொரமின்னு
சட்டய
கலட்டி
போத்தி வச்சம்.....

ஆயாவுக்கு
பசிக்குமேனு
பள்ளிக்கூடம்
போகயில
ரொட்டித்துண்டு
பிச்செடுத்து
குழிதோண்டி
பொதச்சி வச்சம்....

வரியம்
கடந்தப்பின்னும்
பக்குவம
மொளச்சப்பின்னும்
அந்த
மாமரந்தே
எங்க ஆயா...

இன்னும்
எங்க
ஆத்தா
இப்புடித்தே சொல்லுது

## சிருஷ்டி


அமாவாசை
இரவில்
ஒளியிழந்து
ஒளிந்துக்கொண்ட
நிலவுதானோ....?


ஊதைக்காற்றில்
உயிரிழந்து
பறந்து போன
இலை
சருகுதானோ....?

வறல் நிலத்தில்
நீரிழந்து
வற்றிப்போன
சுவடுதானோ.....?

துருவ
விட்டத்தில்
சூடிழந்து
இறுகிப்போன
பனித்துளிதானோ.....?

மலையிடுக்கில்
மாட்டிக்கொண்டு
எதிரொலிக்காத
சப்தம் தானோ.....?





கங்குல்

இரவில்

சக்தியிழந்த

ஞாயிற்று

கற்றைதானோ.....?

இவையனைத்தும்

சல்லடை

கண்கொண்டாலும்

தெரியாத

சிவனின்

சிருஷ்டிதானோ.....?

## கலிக்காதல்

கபடம்
கற்றவளே
விஷம் பூசிய
உன் உதட்டின்
வழி வரும்
முலாம் பூசிய
உன் அன்புக்கு
தாழிட்டேன்....
எவரும்
உட்பிரவேசிக்க
கூடாதென்று.....

உள்சென்று
பார்த்தபோதுதான்
புரிந்தது
தாழிட
முன்னரே
பற்றுச்சீட்டு
பெற்றோர்
பலர்
என்பது.....

## தேயிலை தே(நே)சம்

தேசத்திற்கு
மத்தியில்
மையமிட்டு
வாழ்கிறது
எங்கள்
பரம்பரை....

எல்லைக்கோடு
நிரப்பும்
மலை
மேடுகள்....
பள்ளம்
பார்த்து இறங்கும்
ஊற்று
நதிகள்....

பனித்துளி
படர்ந்திருக்கும்
தேயிலை
இலைகள்....

அவையுடன்

சமரசம்

பேசும்

அட்டைப்பூச்சிகள்....

ஏழு மணி

பார்த்து

முழங்கும்

சங்கு....

எறும்பின்

மகத்துவம்

மீறும்

தொழிலாளர்களின்

பங்கு....

மார்கழி

வந்தால்

குளிருக்கு

சந்தோஷம்...

பஜனை

ஊர்வலத்தில்

ராமருக்கு

கொண்டாட்டம்....

விடுமுறை

தினங்களில்

ஊர்சுற்றும்

இளசுகள்...

வீடு வந்ததும்

திட்டித்தீர்க்கும்

பெருசுகள்....

வீட்டுக்கொரு

கூடு

கோழி வளர்ப்புக்கு

ஆளுக்கொரு

பட்டி

மாடு வளர்ப்புக்கு...

நாலாபுறமும்

நாலின

கோபுரங்கள்...

பேதம்

வெறுக்கும்

நற்பணி

மன்றங்கள்.....

கொஞ்சிக்குளவும்

மலைநாட்டு

வனப்பு...

தோற்றுப்போகும்

வெளிநாட்டு

சிறப்பு.......

## நீ என் காதலியானால்

பிரபஞ்சம்
பிழிந்தெடுத்து
தென்றல் தீண்டா
தேகமதை
மஞ்சள்
குளிப்பாட்டுவேன்....

கருநீல
வானமெடுத்து
ஈரம் தோய்ந்த
நீள் குழல்
உலர்த்துவேன்.....

அன்றலர்ந்த
நறுமலரெடுத்து
பாவையுனக்கு
ஆடை நான்
நெய்வேன்.....

தேகம் தேய்ந்த
பிறை நிலவெடுத்து
கார் குழல்
சீவி சரிசெய்வேன்.....

சிதறிக்கிடக்கும்
நட்சத்திர
துகள் பொறுக்கி
பொன் மேனியதற்கு

## ஆபரணம் செதுக்குவேன்;....

பாதாளம்
பிளந்தெடுத்து
எரிமலை குழம்பதில்
நகைகளுக்கு
வர்ணம் சேர்ப்பேன்.....

வலம் வரும்
வியாழனை இடை நிறுத்தி
வலயம் இரண்டை
கடன் வாங்கி
கம்மல் செய்வேன்....

மின்னல் கீற்றை
அடுக்கி வைத்து
மழைத்துளி வைரத்தை
பதுக்கி வைத்து
பட்டிதழ் செவிகளுக்கு
மாட்டல் செய்வேன்....

வால்வெள்ளி
பிடித்து வந்து
நூலிடை பூவுனக்கு
மேகலை பூட்டுவேன்....

சுட்டெரிக்கும் கதிரவன்
ஒளி திரட்டி
பிறை நிலா நுதலுக்கு
திலகமிடுவேன்....

அறுபத்து மூன்று
நிலவையும் சரிபாதியாக்கி
கமலப்பாதங்களுக்கு
கொலுசு நான் மாட்டுவேன்...

பூலோகம் ஒதுக்கி
முதலாறு
கோள்களையும் நசுக்கி
உன் பாதம் தொடும்
கொலுசதற்கு
மணிகள் செய்வேன்....

என் உயிரதை
எரித்து
இரத்தத்தில் குழைத்து
உன் இமைகளுக்கு
அஞ்சனம் பூசுவேன்....

இத்தனையும்
போதாதென்றால்
ஏழு ஜென்மம் கடந்து
எட்டாவது ஜென்மமெடுப்பேன்
உனக்காக.....

நீ என் காதலியானால்.......!

## எனக்கும் தருவீர்களா?

கருவறையில்
உருவாகி
கழிவறையில்
கண் விழித்த
எனக்கும்
தருவீகளா.....?

பிரம்பெடுத்து
புற முதுகில்
அடித்து பின்
ஒரு புறம் அமர்ந்து
அழும் அன்னையை....

ஹிட்லர்
பார்வையில்
அதட்டி பின்
நகைக்கும்
தந்தையை.....

சடையிழுத்து
கொட்டி பின்
கொஞ்சும்
அண்ணனை....
சண்டை
பிடித்து பின்
சமாதானம்
பேசும் அக்காளை.....

ஒன்றாய்
திருடித்தின்ற பின்
ஒன்றுக்கு ரெண்டாய்
மாட்டிவிடும்
தம்பியை....

செவி சாய்த்து
கதை கேட்டு பின்
மடி சாய்ந்து
தூங்கும் தங்கையை.....

அனாதை
என்ற பட்டத்துக்கு
பின் ஒரு விடியலை
எனக்கும் தருவீர்களா...?

## காதலித்துப்பார்

தூரத்து
விண்மீன் கூட்டம்
பூந்தோட்டமாகும்
உன் கண்களுக்கு....

மௌனத்தில்
உயிர் வலி
கற்பாய்....

தனிமையில்
நெரிசல்
கற்பாய்.....

செவிடன் நீ
ரகசியம்
கற்பாய்.....

ஊமை நீ
பாஷை
கற்பாய்....

குருடன் நீ
வர்ணம்
கற்பாய்....

சுவாசிக்காமல்
உயிர் வாழ்வாய்...

உயிர் வாழ்ந்தே
மரணம் கற்பாய்....

# கலாபம்

அணுவிலும்
நுழையப்பார்க்கும்
நரிகள்
கூட்டத்தின்
மத்தியில்
மண்டியிட்டுக்கிடக்கிறது
கலாப மயில்....

எத்தனை
காலத்திற்கு
காலுடைத்து
ஆட விடும்
இவ்வுலகம்....

யார் யாரோ
வந்து
தடவிக்கொடுக்கிறார்கள்
யாரென்றுதான்
தெரியவில்லை....

இங்கு சிலர்
கடலையும்
காய வைத்து
உப்பளமாக்கும்
முயற்சியில்
முன் நிற்கின்றார்கள்....

இன்னும் சிலர்

கோழிகள்
மதில் மீதேறி
முட்டையிடுகிறது
என்று
கூவித்திரிகிறார்கள்.....

பணத்தை
மணம் முடித்த
சிலர்
சிக்கனத்திடம்
பிச்சை பாத்திரம்
ஏந்தி நிற்கின்றார்கள்.....

இருட்டு உலகத்தில்
குருட்டு பேய்கள்
கோட்டான்களுடன்
தாயம் உருட்டுகின்றன.....

சில கொடிய
விஷமுள்ள
செல்லப்பிராணிகள்
வீட்டுக்குள்ளேயே
விஷம் வளர்க்கின்றன....

தூங்கிக்கிடக்கிறது
மயிலென்று
அழகு இறகு
பிய்த்தெறிய
சந்தர்ப்பம் தேடியலைகின்றன....

அடங்கிப்போன

காலம் கடந்து
ஆட்டிப்படைக்கும்
காலம்
கனிந்துவிட்டது.....

இறக்கம்
இல்லாதவனுக்கு
பிறப்பு எதற்கென்று
சரித்திரத்தில்
சட்டம்
பிறக்கட்டும்....

விகார வடிவம்
பூண்ட
அகோர கூட்டத்தில்
அடங்கிப்போன கலாபி
தன் கலாபம் விரித்து
ருத்ர தாண்டவமாடும்....

இனி
அடைமழை
பெய்யும் வரை
காத்திருக்கப்போவதில்லை......

## ஒருமுறையாவது பாருங்களேன்

நானும்
பார்க்கிறேன்
யாராவது
பார்ப்பீர்கள் என்று.....!!!

மனிதம்
பொழிந்த
கடைத்துளி
நான்தான்....
திக்கற்ற
திசையாயிருக்கிறேன்.....

புழுதியாடை
போர்த்தியிருக்கிறேன்
புத்தாடைகளை
புறந்தள்ளி
வைத்திருக்கிறேன்......

தாய்க்கரம் கூட
தீண்டா
என் தேகத்தை
தீண்டாமை
உரசிக்கொண்டிருக்கிறது......

சீ.....போ.....
சனியனே.....
தரித்திரம்......
தண்டம்....
இவைதான்

நான் கேட்ட
தாலாட்டு.....

புறக்கணிக்கும்
இடதும்
வலதுடன்
சேரும்
கடவுளின்
பார்வையில்......

பரிணாம
வளர்ச்சியின்
பின்
பரிதாப கண்களும்
குருடாகிவிட்டதோ....?

கடினமென்று
தெரிந்தும்
தேடி அழைகிறேன்
நானும்
ஒரு கண்ணப்பரை.....!!!

ஒரு முறையாவது
பாருங்களேன்.....!!!

# அகதிகளானோம்

அந்தரங்க நிலையில்

அவதிப்படுகிறது எனதுள்ளம்

அல்லல் நிறைந்த இவ்வாழ்வில்

அபயம் இல்லாத அபலையாய் நான்

அந்தகனும் என்னிடம் வர மறுக்கின்றான் -என்னை

அநாதையாய் தவிக்கவிட்ட இவ்வுலகிற்கு

என் கண்ணீர் பதில் சொல்லும்......!



ஆகுலம் வந்து என்னை

ஆக்கிரமித்து ஆட்சி செய்கின்றது..

ஆதாயம் கிடைத்தால்தான்

ஆதரிப்பாரும் வருவரோ .....?

ஆறுதல் கொடாமல்

ஆர்ப்பரிக்கும் இவ்வுலகிற்கு

என் கண்ணீர் பதில் சொல்லும்

இலட்சணம் இல்லாத

இவ்வுலகில் நான்

இலௌகீகம் அறிவது எப்படி....?

இயமதருமரே நீங்களும் எனக்கு

இழவோலை தர மறுப்பதேன் ...?

இறைவா உன் படைப்பிற்கு

என் கண்ணீர் பதில் சொல்லும்......?

ஈன்றாரும் இல்லை

ஈங்கிசையின் உக்கரத்திற்கு

ஈடுகொடுக்க முடியவில்லை என்னால்

ஈசனும் இங்கு வந்தால் அவனுக்கும்

ஈசலின் வாழ்க்கை தானோ ....?–தினம்

ஈட்டியால் குத்தி வருத்தும் இவ்வுலகிற்கு

என் கண்ணீர் பதில் சொல்லும்...!

உள்ளக்குமுறலோடு

உலா வரும் நெஞ்சிற்கு

உறுதுணையாய் நில்லாமல்

உதாசீனப்படுத்துகின்றன சில மனங்கள்

உதவும் கரங்கள் எங்கே ...?என்னை

உதறிவிட்ட இவ்வுலகிற்கு

என் கண்ணீர் பதில் சொல்லும்.....?

ஊதைக்காற்றடிக்கும்
ஊழிக்காலத்தில்
ஊளி இல்லாமல்
ஊனமாய் கிடக்கின்றேன் நான்
ஊழ்வினை என்றியம்பி -என்
ஊளி தீர்க்காத இவ்வுலகிற்கு
என் கண்ணீர் பதில் சொல்லும்...?

எண்ணற்ற துன்பங்களில் மிதந்து
எல்லையில்லா சுமைகளை சுமந்து
எடுத்த பிறவிக்காய் அழுகிறேன்..
எல்லிருளில் கிடக்கும் பிணத்தை
எரிவனத்திற்கு எடுத்துச்சென்று
எரியூட்டா இவ்வுலகிற்கு
என் கண்ணீர் பதில் சொல்லும்...?

ஏழ்மையாய் பிறந்ததற்கு
ஏங்குகின்றேன் தினமும்
ஏக்கங்கள் எல்லாம்
ஏறிட்டுப் பார்க்கின்றன
ஏழு பிறப்பிலும் என்னை
ஏளனமாய் பார்த்த இவ்வுலகிற்கு
என் கண்ணீர் பதில் சொல்லும்...?

ஐயறிவுயிரின்

ஐயுணர்வை பிழிகின்றனர்

ஐக்கியத்தை நாடமுடியவில்லை

ஐயுறவுடன் வாழ்வதனை

ஐதீகமக்கப்பார்க்கும் இவ்வுலகிற்கு

என் கண்ணீர் பதில் சொல்லும் ....?

ஒதுக்கிடமொன்றில்

ஒட்டடை தட்டி

ஒண்டி வாழ்கின்றேன் நான்

ஒப்பனை செய்து கொண்டு -என்னை

ஒய்யாரமாய் வாழவிடாமல்

ஒடுக்கி நசுக்கிய இவ்வுலகிற்கு

என் கண்ணீர் பதில் சொல்லும் ...?

ஓமகுண்டலத்தில் எனையிட்டு

ஓமப்பொடியாக்கி..........!

ஓலையில் சுற்றி...........!

ஓடத்தில் வைத்து........!

.ஓடையில் விட்டு.....!

ஓரங்கட்ட விடாமல் ஓடவிடும் இவ்வுலகிற்கு

என் கண்ணீர் பதில் சொல்லும் .....!

ஔவை இல்லை

ஔரசனும் இல்லை

ஔவியம் இல்லை

ஔதாரியமும் இல்லை -வாழ்வதற்கு

ஔத்தியமும் இல்லை பிறர் பிணிக்கு என்னை

ஔடதமாக்கிய இவ்வுலகிற்கு

என் கண்ணீர் பதில் சொல்லும் ....!

கண் வளர்க்கவும் முடியவில்லை

கண் விடுக்கவும் முடியவில்லை

கச்சணிந்த என்னை

கயமை குணம் படைத்தார்

கச்சேரிக்கு அழைக்கின்றனர்.

கஞ்சமகன் என்னை படைத்ததேனோ ....?

கல் நெஞ்சங்களை சுமக்கும் இவ்வுலகிற்கு

என் கண்ணீர் பதில் சொல்லும் ...!

காகித ஓடமாய்

காற்றடிக்கும் திசையில் செல்கிறேன்

காதல் தந்து எனக்கு

காவலிருப்பார் இல்லையோ........?

காத்திருந்து .......!

காரியம் சாதித்து ....!

காலை வாரிவிடும் இவ்வுலகிற்கு

என் கண்ணீர் பதில் சொல்லும் ....!

கிழிந்த ஆடையோடும்

கிளி அழகோடும்

கிடக்கிறேன் வீதியில் நாதியற்று

கிண்டல் செய்து களிப்புற்று-மது

கிண்ணத்தை கையிலேந்தும்

கிறுக்கர்களுக்கு எல்லாம்

கிரீடம் சூட்டும் இவ்வுலகிற்கு

என் கண்ணீர் பதில் சொல்லும் ....!

நான் ரௌத்திரம் கொண்டு


எழுந்துவிட்டேன்

இனியும் தளரமாட்டேன்......!!

# போற்றிப்பாடடி கண்ணே

சுகங்களை புதைத்துவிட்டு
சோகங்களை போர்த்திக்கொண்டு
வெள்ளைக்கார துரைமார்க்கு
வெட்டியாய் வேலை செய்த காலத்தை
வெட்டி புதைத்துவிட்டோமென்று
போற்றிப்பாடடி கண்ணே.....!!!

அடி உதைகளை வாங்கி
அடிமைகளாய் வாழ்ந்து
மாடுகளாய் உழைத்து
மாண்டுப்போன காலமதை
மாய்த்துவிட்டோமென்று
போற்றிப்பாடடி கண்ணே.....!!!



சாதத்திற்கு வழியில்லாமல்
சாத்தான்களின் பிடியில் சிக்கி
செத்துப்பிழைத்து இரத்தம் வடித்து
மனம் உடைந்துபோன காலத்தை
மறந்துவிட்டோமென்று
போற்றிப்பாடடி கண்ணே.....!!!

வெடி வெடித்ததில்
அடி மடி கலங்கி
கத்திக்கதறி மூச்சுத்திணறி
கண்ணீர் வடித்த காலத்தை
மண்ணீரில் கரைத்துவிட்டோமென்று
போற்றிப்பாடடி கண்ணே.....!!!

தலை விதியும்
தலைவர்களின் சதியும்
வாழ்க்கையில் மாறா வடுவாகியது
மாறா வடு தந்து வலி தந்த காலத்தை
மாற்றிவிட்டோமென்று
போற்றிப்பாடடி கண்ணே.....!!!

பஞ்சப்பட்டினியை
பார்க்க சகிக்காமல்
துள்ளி எழுந்த வேகத்தாலும்
உந்தி தள்ளிய கோபத்தாலும்
புதுப்பாதை தேடிவிட்டோமென்று
போற்றிப்பாடடி கண்ணே.....!!!

அந்நியருக்கு எதிராய்
அஹிம்சை போராட்டம்
எமக்கு தெரிந்ததே
விடியலின் வெள்ளோட்டம்
மண்ணை காப்பற்றிவிட்டோமென்று
போற்றிப்பாடடி கண்ணே.....!!!

கத்தி முனையில்
இரத்தக்கறைகள்
தோட்டாக்களுக்கு இறையான
பட்டாம்பூச்சிகளுக்கு
ஆத்துமசாந்தி தந்தோமென்று
போற்றிப்பாடடி கண்ணே.....!!!

வேகத்திரி மூட்டி
கோபத்தீ வைத்து
வெள்ளையனை
வெள்ளை சாம்பலாக்கி

வெளியேற்றிவிட்டோமென்று
போற்றிப்பாடடி கண்ணே.....!!!

இடர்களை தீர்த்து - வாழ்வில்
சுடர்களை வார்த்து வெள்ளையனின்
தந்திரத்தில் உலக
மந்திரங்களை அறிந்து
சுரந்திரத்தை வாங்கிவிட்டோமென்று
போற்றிப்பாடடி கண்ணே.....!!!

கானகத்தே நின்று
தியானம் செய்து
தாயகத்தை காத்து
மயான பூமிதனை
பூங்காவனமாக்கிவிட்டோமென்று
போற்றிப்பாடடி கண்ணே.....!!!

உண்மையினை புரிந்து
உள்ளமதை அறிந்து
பொய்மையை உடைத்து
மெய்மையை நாட்டி
வெற்றிபெற செய்தோமென
போற்றிப்பாடடி கண்ணே.....!!!
நல்லவை செய்து
நல் அவை தந்து
ஊழ்வினை அறுத்து
ஊனத்தை அழித்து
ஊரறிய வாங்கினோம் சுதந்திரமென்று
போற்றிப்பாடடி கண்ணே.....!!!

அடம்பன் கொடியாய்
திரண்டு மிடுக்காகி

புரண்டு போராடி
பறந்து பந்தாடி - வெள்ளையனை
மிரண்டு ஓடவிட செய்தோமென்று
போற்றிப்பாடடி கண்ணே.....!!!

நாடு நமக்கேதும்
செய்யாவிடில் என்ன?
நாட்டுக்காக - எம் தாய்
நாட்டிற்காக நாட்டையே காத்து
சாதித்தொமென
போற்றிப்பாடடி கண்ணே.....!!!
போற்றிப்பாடடி கண்ணே.....!!!

## திறனற்றவன்

என் விரல்களுக்கு
வலிமையுண்டு
என் பேனைக்கும்
நேர்மையுண்டு - ஆனால்
எழுதுவதற்குத்தான்
துப்பில்லை.....

என் நாவிற்கு
உரிமையுண்டு
என் சொற்களுக்கும்
கோபமுண்டு - ஆனால்
சொல்வதற்குத்தான்
வார்த்தையில்லை....

என் கால்களுக்கு
சக்தியுண்டு
என் மூளைக்குள்ளும்
புத்தியுண்டு - ஆனால்
நடப்பதற்குத்தான்
உணர்வே இல்லை....

ஒன்று ஒன்றாய்
எனக்குள்
ஒரு கோடி
சிந்தனைகள் - ஆனால்

ஒன்றையேனும் உருவமாக்க
தெரியாததில்
சோம்பேறித்தனம் பல....

கடவுளைப்போல்
காக்கின்ற புத்தியுமுண்டு
கடவுளைப்போல்
அழிக்கின்ற தோரணையுமுண்டு
ஆனால்
நான் எனக்குள்ளே
முடிவு கொண்டு
அசையாத பாறையாய்
அகமிழந்து
இனியும் இப்படியே கிடப்பேன்
சரி......!
நான் என்ன செய்யணும்......?

## அம்மாவின் கணவன்

விடுமுறை
இல்லா பசி
அவனுக்கு
என்மீது.....

கிழிந்த சேலை
தெரியாத
அவனுக்கு
கிழிசலின் வழி
தெரியும்
சதைப்பிண்டம்
மட்டும் தெரிவது எப்படி....?

பார்வைக்குள்
படர்ந்திருக்கும்
விம்பங்கள்
எப்போதும்
அந்தரங்கத்தையே
சேமிக்கிறது
அவன்
விழித்திரையில்....

அவன்
கசக்கலில்
தவித்திருக்கும்
என் மேனிக்கு
ரணங்களும்
பழகிவிட்டது....
கதவுக்கு

தாழிட தெரிந்த
அந்த நரனுக்கு
என் கழுத்திற்கு
தாலி கட்ட
தோன்றவில்லை....

ஒரு வேளை
அவன் மனைவியின்
மகள்
நான் என்பதாலோ......?

என்
கதறிய நாவும்..
சிதறிய வார்த்தைகளும்...
கலங்கிய கண்களும்....
நொறுங்கிய இதயமும்....
எப்போதும் அவன்
காமப்பிடியிலேயே
ஜீவிக்கிறது...

அவனது
பார்வை
என் தங்கை மீது
படர்ந்து விடக்கூடாது
என்ற அச்சத்தில்......!!!

## நூலாசிரியர் பற்றி...



கவிதை உடலோடு சம்பந்தப்பட்டதல்ல அது உள்ளத்தோடு சம்பந்தப்பட்டது என்பதை நிரூபிக்கும் இந்நூலாசிரியர் செனன் தமிழ் மகாவித்தியாலயத்தில் க.பொ.த (உ/த) வரை கற்று, தமிழிலே தன்னை செழுமைப்படுத்தி கொண்டவர். இயல், இசை, நடனம் போன்ற இன்னோரன்ன துறைகளில் பரிணமித்த இவர் கவிதை துறையினை உயிராக நேசிப்பதோடு, தன் மன கதவினை தட்டி நின்ற சமகால வடிவங்களை, வக்கிரங்களை, எழுச்சிகளை, வீழ்ச்சிகளை, மன உளைச்சல்களை தன் நூலிலே வெளிப்படுத்தியுள்ளார்

கலையரசி என்ற இயற்பெயரினைக்கொண்ட இக்கவியரசியின் கன்னி முயற்சி "கலாபம்" என்ற வடிவிலே தன் தோகையை விரித்தாடி வாசகர்களின் மனதை கவரும் என்பதில் ஐயமில்லை தன் சிந்தனையில் உதித்த எண்ணங்களை, நடக்கும் நடப்பியலை, கடந்து வந்த காலத்தின் அவலங்களை, சோகங்களை, துயரங்களை, விழுமியங்களை அடுத்த சந்ததியினருக்கு சொல்லப்போகும்சாட்சிகளாகவும், தடயங்களாகவும் இந்நூல் அமையும் என்பது தீர்க்கதரிசனம். வாழ்விலிருந்து அந்நியப்படாமல் கவிதைகள் தீட்டப்படவேண்டும் என்ற நிலையில் கலையரசியின் அனுபவ பொக்கிசங்கள் தொடர்ச்சியாக பதியப்பட வேண்டும்.

திருமதி.Y.அருள்மொழிச்செல்வன்
தமிழ் ஆசிரிய ஆலோசகர்
ஹட்டன்

GP|HT|051-2223848